ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2123/7 - 2019 මැයි මස 13 වැනි සඳුදා - 2019.05.13

*2123/7 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு மே மாதம் 13 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

காணி அமைச்சின் குறிப்பு இல.: 13/96/AS/4/461.
எனது இல.: KDS/DOL/4/4/5/2/4.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதனை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

மத்திய மாகாணத்தின் கண்டி மாவட்டத்தில், தொலுவ பிரதேச செயலாளர் பிரிவில், கந்துகர பஹல கோரளே உடுதெனிய எனும் கிராம அலுவலர் பிரிவில் உடுதெனிய எனும் கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவை மா அதிபரினால் அளந்து தயாரிக்கப்பட்ட மஹ 4848 எனும் வரைபட இலக்கத்தினை உடைய வரைபடத்தில் காணித்துண்டு இல. 01 இல் காட்டப்பட்டுள்ள மொத்தக் காணியில் சுமார் 0.5330 ஹெக்டயார் விஸ்தீரணத்தைக் கொண்ட கீழே குறிப்பிடப்பட்டுள்ள, நிவ் பொரஸ்ட் வத்த எனும் பெயரினைக் கொண்ட காணித்துண்டின் விபரம் :

| | | |
|---|---|---|
| ஆரம்ப வரைபட இல. | : | மஹ 4848 |
| காணித்துண்டு இல. | : | 01 |
| காணியின் பெயர் | : | நிவ் பொரஸ்ட் வத்த |
| விஸ்தீரணம் | : | 0.5330 ஹெக்டயார் |
| ஆரம்ப உரிமை கோருவோர் | : | பொது மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை, இல. 55/75, வொக்ஸ்ஷோல் ஒழுங்கை, கொழும்பு 02. |

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2019 ஆண்டு யூன் மாதம் 11 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு தொலுவ பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2019 ஆம் ஆண்டு யூன் மாதம் 04 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

ரீ. ஏ. டீ. டபிள்யூ. தயானந்த,
பிரதேச செயலாளர்,
தொலுவ.

பிரதேச செயலகம்,
தொலுவ,
2019, மே 07.

5 - 704



இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது தொடர் இல.: KDS/DOL/4/4/5/1/7.
முன்னைய தொடர் இல.: (உப/3/காசு/147).
காணி அமைச்சின் இல.: 13/99/வீஈ/259.

மேற்படி தலைப்பின் கீழ் 2013.05.28 ஆந் திகதிய 1812/9 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் 06 - 217 ஆம் இலக்கத்தின் கீழ் என்னால் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள திகதிகள் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் திகதிகள் சேர்க்கப்படுவதன் மூலம் அறிவித்தல் கீழ்வருமாறு திருத்தப் படுகிறது என்பதை இத்தால் அறிவிக்கின்றேன்.

| மாற்றப்பட்ட திகதிகள் | பதிலாக சேர்க்கப்பட்ட திகதிகள் |
|---|---|
| 2013, யூலை மாதம் 08 ஆந் திகதி | 2019, யூன் மாதம் 13 ஆந் திகதி |
| 2013, யூலை மாதம் 01 ஆந் திகதி | 2019, யூன் மாதம் 06 ஆந் திகதி |

ரீ. ஏ. டீ. டபிள்யூ. தயானந்த,
பிரதேச செயலாளர்,
தொலுவ.

பிரதேச செயலகம்,
தொலுவ,
2019, மே 07.

5 - 705